SRI T. T. DANIEL : Sir, may I know what steps have been taken by the Government departmentally?

THE HON. SRI R. VENKATARAMAN : Yes, Sir. Arbitration proceedings under the Co-operative Act have been taken. Besides, criminal proceedings also are being taken.

SRI T. S. RAMASWAMY PILLAI : May I know, Sir, when this happened, and what steps have been taken by the Government?

THE HON. SRI R. VENKATARAMAN : The bags were kept in custody between February and March 1958. The things were discovered in October 1958, and proceedings have been taken immediately.

SRI A. VEDARATHNAM : ஆயிரக்கணக்கான அரிசி மூட்டைகள் கடத்தப் பட்டது. அவைகள் அப்புறப்படுத்தப் பட்டது அதிகாரிகளுக்கு தெரியாமலா இருந்தது ? எப்படி அவர்கள் கண்ணை மூடிக்கொண்டிருந் தார்கள் ? ஏன் அதை உடனே கண்டு பிடித்து நடவடிக்கைகள் எடுக்க வில்லை.

THE HON. SRI R. VENKATARAMAN : ஐந்தாறு மாதங்களுக் குள்ளே நடந்தது. வெளியில் கதவு போட்டு அது பூட்டியே இருந்தது. உள்ளே கோடவுன் கதவை உடைத்து அவைகளை எடுத்துப் போயிருக்கிறார் கள். அதனால் வெளியில் தெரியவில்லை. ஆறு மாதத்திற்குள் இன்வஸ் டிகேட் செய்ய முடியவில்லை. அடுத்த இன்ஸ்பெக்ஷனில்தான் அதைக் கண்டு பிடித்தார்கள்.

(Sri T. S. Ramaswamy Pillai rose.)

MR. SPEAKER : The hon. Member will please sit down. I have allowed a sufficient number of supplementaries on this question. Further this is not an important question. The Hon. Minister has answered that investigation is going on.

Kallar and Keeriyar Schemes

* 235 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Works be pleased to state whether this Government propose to take up the Kallar and Keeriyar Schemes for Tirunelveli district with the Kerala Government for sharing the waters of these rivers?

THE HON. SRI P. KAKKAN : No Sir. The scheme for the diversion of the flows from Kallar a tributary of Achankoil river flowing entirely in Kerala State limits was already considered and found to be not feasible in view of the small benefits expected from the scheme. The Keeriyar (otherwise known as Ghiriyar) scheme was considered and deferred in view of its poor return. The Government have, however under consideration the general question of diversion of flows from the Periyar, Pambayar and the

Punalur rivers which run in the Kerala State for the benefit of Madurai, Ramanathapuram, and Tirunelveli districts, and necessary action in this regard will be taken up with the appropriate authorities of the Kerala State.

SRI K. SATTANATHA KARAYALAR : இந்த பம்பையாறு திட்டத்தைப் பொறுத்தவரையில் சர்க்கார் இதைப்பற்றி இன்வெஸ்டிகேஷன் செய்திருக்கிறதா ? இந்தத் திட்டம் எந்தளவு உபயோகரமாகயிருக்கும் என்பதைப்பற்றி சர்க்காரிடம் ஏதாவது புள்ளி விவரங்கள் இருக்கிறதா ?

THE HON. SRI P. KAKKAN : பம்பையாறு திட்டத்தைப்பற்றி ஏற்கனவே பரிசீலனை செய்தார்கள். கேரள சர்க்காரோடு பேச்சு வார்த்தை நடத்தித்தான் பிற்பாடு அதைப்பற்றி சொல்ல முடியும்.

SRI K. RAMACHANDRAN : அப்பர் பெரியார் திட்டம் பரிசீலனையில் இருப்பதாகத் தெரிகிறதே. அது எந்தெந்த ஜில்லாக்களுக்கு பலன் அளிக்கும் ? அதுபற்றி கேரள அரசாங்கத்தோடு ஏதாவது பேச்சு வார்த்தைகள் நடக்கயிருக்கிறதா ?

THE HON. SRI P. KAKKAN : அதைப்பற்றி கேரள அரசாங்கத்தோடு பேச்சுவார்த்தை நடத்த உத்தேசமிருக்கிறது. அதனுல் ராமநாதபுரம், மதுரை ஜில்லாக்கள் பலன் அடையும்.

SRI M. S. SELVARAJAN : நெல்லை ஜில்லாவிலே புதிய நீர்ப் பாசன திட்டங்களை பரிசீலனை செய்வதற்காக புதியதாக ஒரு சப் டிவிஷன் நியமிக்கப்பட்டிருக்கிறது. அந்த சப் டிவிஷன் இத்துடன் வேலையை பூர்த்தி செய்து விட்டதா ? அப்படி பூர்த்தி செய்துவிட்டால் அந்தத் திட்டங்களை மேஜையில் மீது பார்வைக்கு வைப்பார்களா ? 1-30 p.m.

THE HON. SRI P. KAKKAN : இந்த சப் டிவிஷன் பல இடங்களில் பல திட்டங்களைப் பரிசீலனை செய்து அவைகளை ஒவ்வொன்ருக அனுப்பிக்கொண்டிருக்கிருர்கள். அந்தத் திட்டங்களெல்லாம் வந்த பிற்பாடு, அவைகளைப் பரிசீலனை செய்து அரசாங்கம் ஒரு முடிவு எடுத்துக் கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

Opening of New Schools in Coimbatore District

* 236 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) 1958–59-ம் வருடத்தில் அதிகப்படியாக ஆரம்பப் பள்ளிக்கூடங்களையும் பல்வேறு பாடசாலைகளிலே அதிகப்படியான வகுப்புக்களையும் ஆரம்பிப்பதற்காகவும் கோயமுத்தூர் ஜில்லா போர்டுக்கு சர்க்காரால் ஒதுக்கப்பட்ட மான்ய தொகையிலிருந்து ஒவ்வொரு தாலூகாவிலும் எத்தனை ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் திறக்கப்பட்டன ?

(ஆ) மொத்தம் எத்தனை அதிகப்படியான வகுப்புகள் ஆரம்பிக்கப் பட்டன ?

(இ) எத்தனை மாணவர்களும், மாணவிகளும் கல்வி கற்கச் சேர்த்துக் கொள்ளபட்டார்கள் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : A statement [a] is placed on the table of the House.

---

[a] Printed as Appendix III on page 673 infra.